**<u>O.S.No.232/2013</u>**

**<u>DW2 :</u>** செல்வகுமார் தேதி 06.10.2025

<u>பிவாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 16 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

10 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற ஈரோடு சார்பு நீதிமன்றம் அ.வ. எண். 621/91 ல் இவ்வழக்கின் 5 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தாகும் என்றால் சரிதான். அந்த சொத்து 5 ம் பிரதிவாதிக்கு பூர்வீக சொத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தை 5 ம் பிரதிவாதியும் 16 ம் பிரதிவாதியும் இளவராக இருந்த போது அவருடைய நலனுக்கு எதிராக தன் மனைவி 11 ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மென்ட் எழுதி வைத்து விட்டார் என்றால் சரிதான். தானசெட்டில்மென்ட் பத்திரம் 16 ம் பிரதிவாதியின் பங்கை கட்டுபடுத்தாது என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு கட்டுப்படுத்தும் என்று கூறினார். 11 ம் பிரதிவாதி 12 முதல் 15 பிரதிவாதிகளுக்கு செய்த விற்பனைகளும், விற்கிரயங்களும் 16 ம் பிரதிவாதியை பொறுத்து கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 12 முதல் 15 பிரதிவாதிகளிடம் இருந்து நான் பெற்ற கிரையம் 16 ம் பிரதிவாதியின் பங்கை கட்டப்படுத்தாது என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 16 ம் பிரதிவாதி இளவராக இருந்த போது அவருடைய நலனுக்காக தான் 5 ம் பிரதிவாதியும் 11 ம் பிரதிவாதியும் தாவா சொத்தை கிரையம் எழுதி கொடுத்தாக வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 12 ம் பிரதிவாதியான ராமலிங்கம் 5 ம் பிரதிவாதியையும் 11 ம் பிரதிவாதியையும் ஏமாற்றி சொத்தை திருப்பி எழுதித் தருவேன் என்று நம்பிக்கை கொடுத்து குறைந்த விலைக்கு கிரையம் எழுதி கொண்டார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதனால் மேற்படி கிரைய ஆவணங்களானது 16 ம்

பிரதிவாதியின் பங்கை பொறுத்து கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தி 41, 42, 43, 44 பாராக்களில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக சொல்லப்பட்டவை என்றால் சரியல்ல. 16 ம் பிரதிவாதி தன்னுடைய பங்கை சட்டப்படி பெற உரிமை உடையவர் என்றும் அதை மறுக்க எனக்கு உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.